ஸ்ரீ:

ஸ்ரீ பகவத் த்யாந ஸோபாநம்

தமிழில்

ஸ்ரீரங்கராஜ மாலை

ஸ்ரீ கேசவ அய்யங்கார் ஸ்வாமி ஆக்கியது

தேசிகர் தந்திடும்
மாசறு பத்தியின்
ஆசையி னோர்தமிழ்
கேசவன் செய்தனன்.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்கிககேஸரீ
வேதந்தாசார்ய வர்யோமே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி.

அந்தர்ஜோதி: கிமபியமிநா மஞ்ஜநம் யோகத்ருஷ்டே;
சிந்தாரத்நம் ஸுலபமிஹநு: ஸித்திமோக்ஷாநுரூபம்
தீநாநாத வ்யஸநசமநம் தைவதம் தைவதாநாம்
திவ்யஞ்சஷு: ச்ருதிபரிஷதாம் த்ருச்யதே ரங்கமத்யே.

அமலநலக் கமலபத வழக னார்வத்
தாறுபொறி வீறுதரும் யோக மேறும்
விமலமனங் கிளருமளி யொளியா யோகின்
விழிதழைக்கு மெழிற்கருமை கொழிக்கு மேனி
தமர்கடிறத் தெளிமைவளத் தருமை பூத்தோர்
தருமணியென் றிருமையுநன் றொன்ற நல்கும்
அமரர்தமக் கதிபதியை யரங்க நாப்பண்
அருமறையின் கருவிழியைக் கண்டே னம்மா !

## பொழிப்புரை

(1) அருமறைகட்குக் கண்ணாகியதும் அயர்வறுமமரர்கட்கதிபதியானதும், எளியோர், புகலற்றவர் முதலியோரது துக்கங்களை அகற்றுவதும், சிந்தாமணி போன்றதும், ஞானத்ருஷ்டிக்கு மை போன்றதும், யோகிகளுடைய மனத்தில் தேஜோமயமான திருமேனியுடையதும் நித்யஸூரிகளாலே ஸேவிக்கப்பெறுவதும், மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாததுமான அரும்பிரமம் இப்புவியிலே திருவரங்கத்தின் நடுவுள் நமக்கு ஸித்திக்கும் மோக்ஷத்துக்கும் ஏற்றதாய்க் காணப்பெறுகிறது.

திருவரங்க நகரப்பனின் பரத்வஸௌலப்யங்களைக்கூறுவது இச்சுலோகம். யோகிகளுடைய இதயத்துக்குள்ளே ஜோதியாய் மனோவாக்குகளுக்கு எட்டாதது நாம் காணும் வண்ணம் அரங்க மேடையிலே கிடக்கின்றது. யோகத்ருஷ்டிக்கு மையானவன் மெய்யரங்கன். அவனே அஷ்ட ஸித்திகளையும் மோக்ஷத்தையும் அளிக்கும் சிந்தாமணி. முதலும் புகலும் இல்லாதார்க்குக் கதி அவன். அவர்களுடைய பாவம் துக்கம் முதலியவற்றை அறவே தொலைப்பவன் அவன். பிரமன் சிவன் முதலோர்க்கு அவன் தேவனாவான். மறைத்தலையில் விளங்கும் கண் அவன். இத்தகைய பெருமையுடைய அவன் நாடகமேடையில் நடுவில் நின்று அந்தணரந்தியில் நின்றவனைத்துலகுக்கும் இலக்காய் விளங்குகின்றான்.அமுதனைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக்காணாவே என்று நம் பாணநாதன் ஓதியபடி அவனே கண் என்று மறைமுடித்தேசிகனாகிய நம் ஆசார்யவள்ளல் அநுபவித்து அநுபவித்தவாறே பேசுகிறார் இதில்.